O.S. 17/2023

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:05.02.2025

PW1: அருணகிரி த/பெ– முருகன்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எனது தகப்பனார் முருகன் எனது சகோதர் ஆறுமுகம் மற்றும் எனது சகோதரி சண்முகபிரியா மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது தம்பி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யக்கோரி பரிகாரம் கோரியுள்ளார். இந்த வழக்கின் சொத்துக்கள் கதவு எண்கள். 2/93, 2/222, 2/221, 2/94, 2/78. மேற்படி சொத்துக்கள் எனது பாட்டி மகாமாயி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்களை எனது பாட்டி கிரையம் வாங்கியதற்காக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி சொத்துக்களை எனது தகப்பனார் பிரிக்கப்படாத 1/7 பாகத்தை தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த பிரிக்கப்படாத 1/7 பாகத்தை தான் எனது சகோதரருக்கு தானமாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தந்தை எந்த அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த தானபத்திரத்தை ஏன் ரத்து செய்ய கோரியுள்ளார் என்றால் எனது தந்தையை பராமரிக்காததால். எனது தகப்பனார் எனது சகோதரர் ஆறுமுகத்திற்கு கொடுத்த தானசெட்டில்மெண்ட் தேதி 30.12.2015. அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது தந்தையை 1ம் பிரதிவாதி பராமரிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளாரா என்றால் இல்லை. எனது தகப்பனார், சகோதரர்

1ம் பிரதிவாதியை அடித்து காயப்படுத்தியதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் புகார் மனு தாக்கல் செய்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது  தந்தை உடல்நிலை சரியில்லாமல் உள்ளார் என்று சொல்லியுள்ளேன், அதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி பெயரில் எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த 30.12.2015ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் எந்த நிபந்தனையும் இல்லாத காரணத்தினால் இந்த வழக்கில் அவர் கோரியுள்ள மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் நகைகளை நானும், எனது தகப்பனாரும் வைத்துக்கொண்டதால் எங்கள் மீது புகார் கொடுத்ததால் ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனார் நல்ல உடல்நிலையில் தான் உள்ளார் என்றும், சாட்சியம் அளிக்க வந்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதற்காக சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.